பரதேசியின் பயணம்



Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

27-1-2024

பரதேசியின் பயணம்	
இல.	பெயர்
1	மணமிழந்த மலர்கள்
2	மானஸஸ் தீவு
3	மன்னரும் மாதரசிகளும்
4	மதம் கடந்த ஆன்மீகம்
5	மேகம் மூடிய முழுநிலவு
6	மைக்கல் ஆஞ்சலோ
7	மோக முள்
8	மொட்டும் மலரும்
9	முகாபே
10	மும்பையில் ஒரு நாற்சந்தி
11	மும்தாஜ்
12	முதற்காதல்
13	நன்றி சொல்லும் உள்ளம்
14	நான்காம் மலம்
15	நட்பு
16	நீர் மூழ்கி
17	நீதி மன்றம்
18	நெஞ்சின் அலைகள்
19	வட கொரியா
20	ஒரு மொழி சொல்லாயோ
21	ஒரு பொழுது வாழ்வு
22	ஒரு பால் காதல் உறவு
23	ஒரு தடவை உன்னைப் பார்க்க
24	ஒருத்தி ஒருவனை மறந்துவிட்டாள்
25	பாடி அழைத்தேன் உன்னை
26	பரதேசியின் பயணம்
27	பார்வைகள் பலவிதம்
28	பிறவாமை வேண்டும்
29	பொய்கை
30	பூக்களைப் பறிக்காதீர்
31	பூவிழி வாசலில்
32	போதையும் பேதையும்

மணமிழந்த மலர்கள்

ஜாதகப் பொருத்தம் பார்த்து, சீர்வரிசை பேசிமுடித்து
முகூர்த்த நேரம் கணித்து, மூத்தோர் முன் மாங்கல்யம் அணிந்து
அக்கினி வலம் வந்து அம்மி மித்து, அருந்ததி காட்டி
ஆசார அனுஷ்டானங்களோடு மணம் முடித்தவர்களும்-
மனம் முறிந்திட விவாகரத்துச் செய்தார்

மணவாழ்வுக் கருந்தரங்கில் கற்றறிந்து
திருப்பலியில் ஒன்றினைந்து
திருவருட்சாதனமாய்த் திருமணம் முடித்தவர்களும்
மனம் கசந்து மணமுறிவு பெற்றார்

அழகில் மயங்கி, காதலில் விழுந்து
அம்மையப்பனை எதிர்த்து மணம் முடித்தவர்களும்
மனம் முறிந்து விவாகரத்துப் பெற்றார்.

கட்டழகனை கண்டு மயங்கி
காரும், வீடும் சீதனமாய் கொடுத்து-மனைவி
கணவனாவரும் மண விலக்குப் பெற்றார்

கண்பார்த்து நெஞ்செழுதிய காவியம்-எம் காதல்
காதல் போயின் சாதலே என்றவரும்
மணமுடித்து பிள்ளைச் செல்வம் பெற்ற பின்
மனம் உடைந்து பிரிந்து வாழ்கின்றார்

கணவனே கண்கண்ட தெய்வம்-
மனைவி சொல்லே மந்திரம்
மயக்கி மருந்திட்டு வசியம் செய்து
மணமுடித்தவர்களும் மணமுறிந்து பிரிந்தார்.

ஆதாம் ஏவாளிற்கு தெரிவு செய்ய
வேறு துணையில்லை
விவாகரத்திற்கு வழியேயில்லை

துச்சாதனன் துகில் உரிந்த போதும்-பாஞ்சாலிக்கு-
பாண்டவர்களைப் பிரிந்திட துணிவில்லை
மாதவியே தஞ்சம் என்ற கோவலனை பிரிந்திட
கண்ணகிக்கு மனமில்லை

ஸ்ரீராமனை பிரிதலில் சீதைக்கோ
வருத்தமில்லை-கணவனை விவாகரத்துச் செய்த
துணிவுள்ள முதல் பெண்ணும், தாயுமாய்ச் சீதை

பல்லாயிரம் மனைவிகள் கொண்ட
கிருஷ்ணனோ அவதார புருஷன்
ஆயிரம் மனைவியர் கொண்ட மன்னன்
சாலமோனோ ஞானி?

தாரம் துறந்த சித்தார்த்தன்
ஞானம் பெற்று புத்தரானார்
நபியாய் வாழ்ந்தும்-பல நாயகிகள்
கொண்ட முகம்மது இறை தூதர்

இறையரசிற்காய் தம்மையே
அண்ணகனாக்கிய இயேசு மானுட மீடபர்

அம்மை, அப்பனின்று உலகில் படைப்புத் தொடராது
இல்லறம் நல்லறமாய் நிலைக்க
கணவன், மனைவி உறவு இன்றியமையாது

அறத்தில் நிலைத்து, பொருள் ஈட்டி
இன்பத்தில் திளைத்திட இல்லறமே நல்லறம்-
இல்லறத்தில் இன்புற்றவருக்கே நற் துறவு
பிரமசாரியம், சம்சாரி வாழ்ந்தறிந்து
மனம் துறக்க சந்நியாசம்-இறுதியில் வனவாசம்

வாடிய மலர்கள் பூஜைக்கு உதவாது
வாசமில்லாத மலர்கள் மாலை கட்ட
மனம் விரும்பாது, வண்ண வாச மலர்களைத்
தேடும் தேனீ-ஒரு போதும் அழுக்கில் அமராது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

மானசஸ் தீவு

பாப்புவா நியுகினியின் தொலைதூர எல்லையில்
மனித சஞ்சாரமற்ற மானசஸ் தீவு

பிறந்த மண்ணை-யுத்தம் தீய்க்க
பெற்ற சொந்தங்களைச் சோகம் சாய்க்க
வாழ வழியின்றி உயிர்காக்க புகலிடம் தேடிய அகதிகள்
குப்பைகளாய் ஒதுக்கப்பட்டு, பறை நாய்களாய் நடத்தப்படும்
அவுஸ்திரேலிய அரசின் அராஜக திறந்த சிறைகூடமாய்
மானசஸ் தீவு

நாளைய கனவும், நேற்றைய கவலைகளும்
இன்றைய வாழ்வை அழிக்க,-
நாதியற்ற மானுட வாழ்வு நாறிமணக்க
மனித உரிமைகளைப் புறந்தள்ளி-அவுஸ்திரேலியா
மானுடத்தை விலங்குகளாய் நடத்திடும் கொடுமை
மானுட மனச்சாட்சியை உலுப்பிய நிலைமை

ஆண்டுகள் பல அகதிகளாய் வாழ்ந்தவர்-இன்று
உணவும், நீரும். உடையும் இழந்து
மின்சாரமும் துண்டிக்கப்பட
அனலிடைப் புழுவாய் அல்லலுறும் அவலம்.

மானுடமும்-மலசலகூடங்களும் ஒன்றாய் நாறி மணந்திட
வாழிடமோ கால்நடைக் கொட்டிலாய் மாறி
காணும் நெஞ்சங்களை உலுக்கிட
குழிதோண்டி நீர் தேடி, குளிக்கவும், குடிக்கவும்
மழைக்காய் தவமிருந்து-நாளும் கண்ணீரில் முகம் கழுவும்
நாதியற்ற பல்தேசத்து அகதிகள்.

வான் நிலவுக்கும் ஓர் நாள் அமாவாசை
மின்சாரமின்றி வாழும் அகதிகளுக்கோ
நாளும், பொழுதும், வாழ்வும் அமாவாசை

சுள்ளி பொறுக்கிக், கொட்டி கிடந்ததில் கூழ் சமைத்து
உண்டு, உறவு கொண்டாடும் அகதிகளும்-
ஒருவர் கண்ணீரை மற்றவர் துடைத்து
நம்பிக்கை வளர்ப்பார்.
நலிந்து தேயும் நிலவைக் காட்டி-நாளை
வளர்பிறை வரும் என்பார்?

உளவியல் ரீதியில்- உடலும், மனமும், அறிவும் முடமாக
அச்சமும், ஐயமும் நாளும் வளர, தொழுத
தெய்வங்களும் கைவிட்டதோ எனக் கண்களும் குளமாக
நம்பிக்கை அழித்து மானுடத்தை நடைப்பிணமாக்கி
மனித உரிமையை கேலி செய்யும் அவுஸ்திரேலிய அரசு
நாஸிஸ ஹிட்லரின் புதிய வாரிசு?

பலதேசத்து பறவைகளும் பனிக்காலம் கழிக்க, இடம் மாறிப்பறக்க
வேடங்தாங்கல்களும் புகலிடம் கொடுக்கும் உலகில்
ஆதிக்குடிகளை அகதிகளாக்கி, நாட்டை ஆக்கிரமித்த-
கொள்ளைகார வெள்ளை குடியேறிகள் வெந்த புண்ணில்
வேல் பாய்ததுபோல் புகலிடம் தேடி அல்லலுற்ற அகதிகளை
குற்றவாளிகளாய் நடத்தும் கொடுமை
மனிதாபிமானத்தின் சிறுமை

இயேசு. மரி. சூசையும் அகதிகளாய்-எகிப்திற்கு ஓடியதை
கிறிஸ்தவர் இவர்களும் மறந்ததில் ஆச்சரியமில்லை?-இன்று
கிறிஸ்துவை இவர்களும் மறுதலிப்பதில் வியப்பேதுமில்லை

வெள்ளைக் காலணித்துவம் வெற்றிக் கொண்ட பூமியில்
வேதமோ கிறிஸ்தவம்-குற்றவாளிகளுக்கு
அன்றோ திறந்த சிறைக்கூடம்
புகலிடம் தேடும் அகதிகளுக்கு-கதவை மூடும்
அநாகரிகம்-பூர்வீகக் குடிகளை-இன்றும்
போற்றாத இழிந்த தத்துவம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

மன்னரும் , மாதரசிகளும்

சுயம்வரத்தில் தம்பி வென்றவளைச்-
சூதாட்டத்தில் பகடைபொருளாக்கித் தோற்ற
சூதாடி அண்ணன் தருமன்

சிறையெடுத்து சென்றவனைப் போராடிக் கொன்று,
நெய் வளர்த்த தீயில் நீராட்டிச் மனைவியாய் ஏற்றவன்,
வண்ணான் மொழியால் -பின்னாளில்
கர்ப்பிணியை கானகத்திற்கு அனுப்பி வருந்திய
கணவனாய் ராஜா ராமன்

சத்தியத்திற்காய் நாடிழந்து, செல்வமிழந்து
பத்தினியையும், பாலகனையும் இழந்து
தன்னையுமிழந்த வெட்டியானாய் மாறிய மன்னவன்
தெய்வங்களும் வாழ்த்திட
சத்தியமே தெய்வம் என்ற ஹரிச்சந்திரன்.

கோல், படை, குடை, முடி. மனை , மகவு துறந்த
சித்தார்த்தன்-ஓயாத தேடலில்
உண்மையை தன்னுள் கண்ட புத்தன்.

கடவுளே உண்மை என்று வாழ்ந்து காணாத காந்தி
உண்மையே கடவுள் என்றறிந்த மகாத்மா

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

மதம் கடந்த ஆன்மீகம்



இரு கரங்களையும் இழந்த-ஆப்கான் இரானுவவீரர்
அப்துல் ரகீமுக்கு, இறந்த கணவரின் இரு
கரங்களையும் , தானமாக்கி மகிழ்ந்தார்-கேரள
கத்தோலிக்க யோசேப் குடும்பத்தார்

சத்திர சிகிச்சை நிபுணர் கிருஷ்ண ஐயர் வெற்றிகரமாய்
கரங்களைப் பொருத்திட, கை கொடுத்த தெய்வங்களை
கரம் குவித்து வீரனும் வணங்கிட, வாஞ்சையோடு தம்மை
அணைத்த கணவரின் கரங்களை வாழவைத்த
பெருமையை சூடிக்கொண்ட மனைவி.

வள்ளலாய் வழங்கி-தெய்வமாய் பொருத்தி
தானமாய் பெற்றவர் எல்லோரும் மகிழ
அன்பே தெய்வம் மெய்யானது

இந்து, முஸ்லீம், கிறிஸ்தவம்
அன்பினால் இணைந்த அற்புதம் இது
மதம் கடந்த மகோன்னதமான
அன்பிற்கு ஏது தடை? அன்பே கடவுள்

நல்லோர் உள்ளங்களில் வாழும் தெய்வம்
அன்பு மழை பொழியும், நலிந்த உள்ளங்கள்
மெய்யாய் கூவி அழைக்க, உதவிக் கரம் நீட்டும் தெய்வம்
வாழும் கோயில் மனிதர் நம் உள்ளம்

அன்பே வேதம்-சத்தியமே மாறாத கீதம்
மதம் கடந்து பார்- நீயும் தெய்வம்
மனங்கழிந்திட மறையும் மதவாதம்
தூய மனத்தவரக்கே வரமாகும் சத்திய தரிசனம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

மேகம் மூடிய முழு நிலவு

முழுநிலவே உன் திரு முகத்தை
முக்காடிட்டு மறைக்காதே, மூச்சு முட்டுதடி,
காதல் இதயம் இரும்பாய்க் கனக்குதடி

அபாயாவும் என் கண்களுக்கு இரும்புத்திரையடி
நம் காதலுக்கு கறுப்புக் கொடியடி
உன் அழகை மறைத்து-என் விழிகளுக்கு
நீ கொடுக்கும் தண்டனை கொடிதடி

நிலவையும், மலரையும் பிரிக்க ஏனிந்தச் சதியோ?
தேன்நிலவிற்கும் வெண்மேகத் திரையோ?
பூங்கதவு தாள்திறக்க புன்னகைக்கும் மலர்கள்,
வெண்மேகத்திரை விலக்கி முகம் காட்டும் வான் நிலவு

இமைக்கதவை திறந்து-தேவி உன்
எழில் முகம் காட்டடி
அபாயாவைக் களைந்து-அன்பே
காதல் தரிசனம் கூறடி

கண்வழி நுழைந்து பூ நெஞ்சினில் காதலை நான் எழுத
பூவிழிகளால் என்னைத் தொட்டுத் தழுவடி
பூந்தேன் சுவைத்து போதையில் தள்ளாட
இதழ் தேன்மது கொஞ்சம்- ஈவாய் கண்மணி

கோவையிதழ் செந்தேனை கொஞ்சிப்பருகிட
அருள் புரிவாய் கண்மணி
என் அபாய(ா) காதலி-காமனுக்கு
என் அபயம் நீயடி என் கண்மணி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

மைக்கல் ஆஞ்சலோ

படைத்தவனைப் பெரும் கலைப்படைப்பாக்கி
அழியாத ஓவியங்களாய், அற்புதச் சிற்பங்களாய்
வரைந்தும், வடித்த அற்புதமாய்
படைப்பாளி மைக்கல் ஆஞ்சலோ

சித்திரங்கள் பேசி வாழ்ந்திட
சிற்பங்களும் வாழும் மனிதர்களாய் மாறிட
நூற்றாண்டு பல சென்றும், ஆலயங்களில் வாழும்
இறைவனோடு-இன்றும் "தெய்வீகன்" எனப் பெயர்
சூடி வாழும் மா கலைஞன்.

கவிஞனாய், ஓவியனாய், சிற்பியாய், கட்டிடக் கலைஞனாய்
காலத்தால் அழியாத படைப்புகளால் வாழும்போதே
தெய்வீக புருஷன் (Il Divino-"the divine one")
எனப் புகழ்பெற்ற படைப்பாளி.

பாலூட்டிய தாதியும், பரவசமூட்டிடக்
கை நின்று கலைவண்ணம் காட்டிய
சுத்தியலும், உளியும்
என்னைக் கலைஞனாய் மாற்றின.

The Madonna of the stairs (1490-92)
Pieta (1499), David (1504)
Moses (1515)
Sistine Chapel Ceiling Paintings (1512)
The last judgment (1541)
சிற்பக்கலைக்கே அற்புதம்-
ஆலயத்தில் தீட்டிய வண்ணச் சித்திரங்களோ
ஓவியக் கலையின் உன்னதம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

மோக முள்

அன்ன நடையும், சின்ன இடையும் இதயத்தை வாட்ட
ஆடிவரும் மலர் கூந்தலிலே அண்ணகன் மனதையும் வருத்த
கடைகண்ணால் என்னைத் தாக்கி காதல் சுரம் தந்து
என் துன்பம் அறியாது- மனதுயர் காணாது-என்னைக்
கடந்து போன அழகின் இலக்கணமாய் அவள்

உன் கண்பட்டு என் இதயம் பொங்கும் காதற் கடலாக
காமன் கணைபட்ட நெஞ்சம் புண்ணாகிக்
காதலில் விழுந்ததடி கண்ணம்மா-
இதயமெங்கும் காதல் காயமடி செல்லம்மா

அன்ன நடையும், சின்ன இடையும் ஆணிப்பொன் அழகு மேனியும்
ஆணினத்தை கொல்ல, அஞ்சண விழிகளோ-நெஞ்சில்
ஆறாத காயத்தை உண்டு பண்ண, அள்ளிக்கொள்,
ஆராத் தழுவிக்கொல் என அசையும் பூங்கரங்கள்
பூவாசம் வீசிடும் பொன்மேனி புன்னகை சிந்தும் செவ்விதழ்கள்

இதழ் கொண்டு, இதழமுதை இதழ்களால் பருகு-
காமனை வெல்ல காதல் மருந்து கனிரச விருந்து
கவிதை சொல்லும் கன்னி-காளை நெஞ்சங்களை
கண்ணாலே வாட்டும் காமினி

பிரம்மன் படைத்த காதற்கிளி, கம்பனும் பாடாத கவிதை மொழி
தேன்மலர் கண்டு மயங்கும் தேனீ, தேவதையாள் அழகு கண்டு
காதல் போதையுறும் முனிவனோ ஞானி

இடையும், நடையும் குலுங்கும் இளமேனி அழகும்
நெஞ்சை அள்ள- விரிகுழலும், சேல் விழிகளும்
மதி முகமும், மயக்கும் பேரழகும்
காளையர் மனதை கனவிலும் கொல்ல
மாமுனியின் மனதையும் வெல்ல
நங்கையோ, காதல் கங்கையோ இவள்?

கண்களும் அழகில் நீராடி காதல் காமமுற்று தவிக்க
இதயமோ கவி பாடி களிக்க, பார்கப் பார்க-நெஞ்சில்
காதல் பசி தோன்றும் இன்பக்கனி -இவள்
யாரும் பறிக்காத, சுவைக்காத புத்தம் புது
ஏதேன் தோட்டத்து காதல் கனி

கண்டதும் நெஞ்சம் காதல் கொள்ள
கள்ளுண்ட போதையில் மனம் தள்ளாட
இதழ் கண்டே இதயத்தில் தோன்றும் இன்ப அதிர்ச்சி
இளநெஞ்சில் பூகம்பமாய் நாளும் தொடர
இவளின்றி வாழ்வில்லை
இவளே வாழ்வென்று-இறைவனிடம்
இதயம் வரம் வேண்டும் நிகழ்ச்சி

மோகமுள்ளாய் வாட்டும் காதல் நோய்க்கு
கன்னியே அருமருந்து-பெருவிருந்து
இவளோடு வாழ்தலே சொர்கம்
இவளில்லா வாழ்வோ நரகம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

மொட்டும் மலரும்

வெண்ணிலவோ வளர்ந்து காய
பெண்ணிலவின் மடியில் காளையும் சாய
அன்று, அலைபாயும் கடலோரம்
காதல் கவிபாடும்- அஞ்சுகங்கள்

காதலி மடி மாற்றும், காளையர் கண்டு
மகிழ்ந்து வளர்ந்த வெண்ணிலவும்-இன்று
மனம் நொந்து தேயும் காலமிது

மண்ணில் கலந்த இரசாயனம் மரத்தைக் கொல்ல
நிழற்குடை பிடித்த மரமும் இலையிழந்து களையிழந்து
மொட்டையாய் மெல்லச் சாக, நிலத்தடி நீரும் வற்றிட,
நின்று தகிக்கும் சூரியனும் சுட்டிட எங்கும் அனல்

எண்ணெய், எரிவாயு, நிலக்கரி ஓயாது எரிய
பச்சை வீட்டு வாயுக்களால் ஓஸோன் படை காயமுற
கொதிக்கும் பூமி, கரையும் துருவப்பனி
உயரும் கடல் மட்டம், வெள்ளம், புயல், நிலநடுக்கம்
எனப் பருவக்கோளாறுகள்

புண்ணில் விழுந்த அமிலமாய் துயரம்
இதயத்தை மெல்ல
நேசிக்க யாருமின்றி மாசடையும் பூமி.

வளங்களை சூறையாடும் கொள்ளையராய் வல்லரசுகள்
கடற்தாயின் மடியில் நாளும் இரசாயனக் கழிவுகள்
கடலும் மாசடைய, வறுமையிலோ ஏழை நாடுகள்
செல்வர் வீட்டில் நாய்களும் கோடிஸ்வரர்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

றொபட் முகாபே

முப்பத்தேழு வருட சர்வாதிகாரி முகாபேயின் ஆட்சி-
இரத்தம் சிந்தாத இராணுவப் புரட்சியால் வீழ்ச்சியுற,
சிம்பாபே வரலாற்றில் இன்று ஒரு புதிய சுதந்திர தினம்,

பிளவுபட்ட குலமெல்லாம் ஒன்றினைந்து
புதிய விடியலை வரவேற்க,
தெருவெல்லாம் கொண்டாட்டம்
வயது குல, நிற, வர்க்கபேதமின்றி-
மக்களின் ஆனந்த ஆர்ப்பாட்டம்.

யுத்தமின்றி, துளி இரத்தமின்றி நடந்த
இராணுவப்புரட்சியால்
மனித உரிமையின் புது எழுச்சி
ஜனநாயகத்தின் புது மலர்ச்சி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

நாற்சந்தியும் நான்கு மனிதர்களும்

மும்பாயின் நாற்சந்தியில்-ஒரு
போக்குவரத்து சமிக்ஞை விளக்கு
மஞ்சள், பச்சை, சிவப்பு என நிறம்மாறி
பூப்பூக்கும் சமிக்ஞை விளக்கடியில்
நாளும் பல அதிசயங்கள்

நிறம் மாறும் விளக்கொளியில் நின்று, நகரும் வாகனங்கள்
ஓணாணான்போல் நிறம் மாற்றி வாழும் மனிதர்கள்
பல சில்லறை வியாபாரங்கள்.

அன்று ஆகஸ்ட் 15, இந்திய சுதந்திரத் திருநாள்.

ஏழைச் சிறுவர்கள்-பயணிகளை இரந்து மன்றாடி
தேசியக் கொடி விற்று வயிற்றை நிரப்பிடத் துடித்திட
கதரும், காந்திக் குல்லாயுமணிந்து
காரில் வந்த சட்டசபை உறுப்பினர்கள்

கொடி வாங்க கெஞ்சிட
தேசியகொடிக்கு பேரம் பேசிய "கதர்கள்"
தேவையில்லை உங்கள் கொடி
கட்சிக்காரியாலயத்தில்- எமக்கோ இலவசக் கொடி

இறுமாப்போடு இரைந்து கேலியாய் நகைத்திட
அருகே இரந்து நின்ற திருமங்கையரும் சிரித்தவர்களை
விழிகள் சிவக்க தூ! தேசிய கொடிக்கும் பேரம் பேசும் பேமானி
வேசி மக்களே எனத் தூற்றிட-வெட்கிய கதர்கள்
விரைந்து ஓடி மறைந்த கார்கள்

பேருந்தில் பயணிக்கும் தொப்பியணிந்த முஸ்லீம் பயணி-
மூன்று குழந்தைகளுக்கும் மூன்று
மூவர்ணகொடி வாங்கி மகிழ்வோடு கொண்டாட
மலரும் இன்றைய இந்திய சுதந்திரம்

பூக்களாய் மலர்ந்த ஏழைச்சிறுமிகள் ஓடி களைத்துப் பூவிற்றிட
காரில் வந்த வயதான செல்வந்தன் பூ வாங்கும் சாக்கில்
பூக்கரங்களையும், கன்னத்தையும்
தொட்டுத் தடவி காமம் தணிக்கின்றான்
ஒன்றமறியாத பூவாய் சிறுமி புன்னகை பூக்கிறாள்.

திருமங்கையோடு-விலைமாதர்களும் வீதிகளில் விலைபோகும் இரவு நேரம்
காரில் உலா வந்த குலமங்கை-கட்டழகனைக் காமப் பசி தீர்க்க வாங்கிச்செல்ல
உடற் பசிபோக்கும்-உடல்களும் நாற்சந்தியில் நாறாத மீனாய்
நாளும் விற்பனைக்குண்டு

ஊமையாய், அங்கவீனராய்- உள்ளாடையோடு ஏழை, பரதேசியாய்,
பிணமாய், பிஞ்சு குழந்தையோடு தாயாய், குருடனாய்,
முடவனாய், தொழு நோயாளியாய் ஆயிரம் வேஷமிட்டு மானுடம்
அல்லாடி பிச்சை கேட்டு பிழைக்கும் நாற்சந்தியில்
பின்னிருக்கையில் இருந்த செல்வரோ பிச்சையிட மறுக்க-முன்னிருக்கை
ஓட்டுனரோ தர்மம் செய்து மகிழ-மனிதம் சாகாத அதிசயங்கள் இங்கே

ஏழைச் சிறார்களை அங்கவீனமாக்கி -பிச்சை எடுத்து
பிழைப்பு நடத்தும் கொடூர தாதாக்களும் இங்கே
இருப்பதை பகிர்ந்து ஏழையின் பசிபோக்கும்
இராக்கால மங்கையரும், இராப்பிச்சைகாரரும் இங்கே.

சாதியமில்லாத நாற்சந்தி ஏழைகளுக்கு
மதங்களும், கோயில்களும் எதற்கு?
சட்டமும், நீதியும் விலைபோகும் சமூகத்தில்
சாதியகோயில்களில் சமத்துவமில்லை.
இழிந்த வேதங்களில் ஏழைகளுக்கு நீதியில்லை

பட்டாடை அணிந்து, பலகாரம் உண்டு, பட்டாசு கொளுத்தி
பணக்கார ஜாதி தீபாவளி கொண்டாடிட-கூலி
அழுக்குச் சட்டையோடு குப்பைகளை கூட்டி பெருக்கி
தெருவை சுத்தம் பண்ணிட மலரும் காலைப் பொழுது

மஞ்சள், பச்சை, சிவப்பு என நிறம்மாறி பூப்பூக்கும்
சமிக்ஞ்சை மரத்தடியில் நாளும் பல அதிசயங்கள்
நிறம் மாறும் சமிக்ஞ்சையில் நின்று, நகரும் வாகனங்கள்
நிறம்மாறி வாழும் மானுடங்கள் வாழ்வே நடிப்பாக
பல நிற முகமூடி மனிதர்கள்

தெருவெல்லாம் கூட்டிப் பெருக்கிட பட்டாசுக்குப்பை
மனங்களிலோ கூட்டியும், பெருக்கியும் போகாத
ஜாதி மதவாதக் குப்பை
ஹே ராம், யா அல்லா-ஓ என் இயேசுவே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

மும்தாஜ் என் அன்பே

என் கண்களைத்தவிர-வேறு ஆடவர்
கண் படக்கூடாதென்றா-என் அன்பே-
அபாயாவால் உன்னை நீ மூடிக்கொண்டாய்?

கண்படும் உன் அழகைக் காளையர் பார்த்து
காதலால் புண்படக் கூடாதென்று
காதலே நீ நினைத்தாயோ?
அபாயாவால் உன்னை மறைத்தாயோ?

உன் கொள்ளை அழகை கொள்ளையிட்ட என் காதல் நெஞ்சோ
உன்னைக் காணத் தவிக்க-அபாயாவோ தடுக்க
ஏனடி என்னை கொல்லும் இந்த அபாயாச் சிறைவாசம் எனக்கு?
உன் நெஞ்சில் நானும் என் நெஞ்சில் நீயும் வாழும்போது
நமக்குள் அபாயா எதற்கடி ?

அழகே, என்னைச் சூடும் ஆரணங்கே
காதல் கவிபாடும் கானக்குயிலே
கடவுள் தந்த காதல் வரம் நீயடி

மும்தாஜே என் முழுநிலவே பார்வையால் உனை தழுவிப் பருகி
காதல் விருந்தாய் சுவைத்திட அபாயாவை அகற்றடி
பெண்ணே உன்னால் வந்த காதல் சுரம் தணியக்-கண்ணே
அபாயாவாய் மாறி என்னை மூடிக்
என்தன் காதற் காமம் தணியடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-05-2023

முதற் காதல்





வண்ண நிலவோ கண்களை மயக்க
வாசத்தென்றலோ சுவாசத்தை நிறைக்க
விண்ணில் விந்தையாய் விரியும் பேரழகு
சிந்தையை மயக்க-
பேரானந்தமோ நெஞ்சை நிறைக்க
தனிமையோ என்னை ஆட்டிப்படைக்க
இனிக்கும் இரவினில்
இதயம் இறைவனை வேண்டியது.

தந்தையே! இதுவரைக் காதலை அறியேன்
கற்றதெல்லாம் நூல்களில்
கவிஞர் காவியங்களில், சினிமாவில்
நானும் காதல் வயப்படவேண்டும்
நெஞ்சுருகி ஒருத்தியை நேசிக்க வேண்டும்

இதயம் உடைந்து நொருங்கி சோகக் கடலில் மூழ்கிட
காதலின் வேதனையை அறியவேண்டும்
காதல் சிலுவையை இதயம் சுமக்க வேண்டும்



ஏனோ இந்த விபரீத வரத்தை மனம் விரும்பி வேண்டிட
நான் அறியாத காதல் அனுபவத்தை அறிந்து தெளிந்திட
இறைவனை வேண்டினேன்
தேவதாஸீம், மஜ்னுவும் பட்ட துன்பம்
நானும் பட, காதலை யாசித்தேன்,

என் நெஞ்சிலே இன்றும் காதலின் ஆறாத ரணங்கள்
இதயத்திலோ ஒற்றை குயிலின் ஓயாத சோக கானங்கள்
என் காதல் பூ வனமோ பாலையானது
என் கவிதைச் சோலையோ கானல் நீரானது

அலை அலையாய் எழுந்து விழும் மனம் அவள் மடிக்கரை தேடும்
காயும் நிலவும், கரையும் குயில்களும் என் காதலைச் சொல்ல
மலரளந்த மதுமலர் கூந்தலும், மயக்கும் முறுவலும் கனவிலும்,
நினைவிலும் மனதை கொல்ல, நேசத்தால் விம்மும் நெஞ்சம்
நிம்மதி இழந்து சோகத்தால் தவிக்க என் காதலும் பொய்யாய்
கனவாய், பழங்கதையாய் போனதே
என் வேண்டுதலும் இறை தந்த வரமானது
காதல் எனக்கு அன்பின் புதிய பரிமாணத்தை
அனுபூதியில் கற்றுத் தந்த ஆசானானது

தென்றலாய் வந்து, தேவதைபோல்
வீட்டில் உலாவி, உறவாடிக் கதைபேசி
குறுநகையால் நட்பாகிச், சித்தனாய் வாழ்ந்தவனை
காதல் பித்தானாய் மாற்றி மறைந்தவள்
மனதை கொட்டிக் கடிதம் எழுதினாள்



“மண்ணில் புதையுண்ட வைரமாய் நீங்கள்
கன்னியர் எவரும் உங்களை -இன்னும் காணாதது-ஆச்சரியம்
கண்டால் உங்களை கவர்ந்து செல்வார்-காதல் எனும்
பொன் விலங்கிட்டுப், பூ இதயத்தைக் களவாடிச் செல்வார்

என் இதயமோ உங்களை கண்டதும்
தன்னை மறந்து போனது
உங்களோடு எல்லாவற்றையும்
பகிர்ந்திட ஆவல்-அதிலும் என் இதயத்தை?



எனக்குப் புரியாத மொழி, ஒரு பெண்ணின் இதய ஒலி
கானமாய்க், கவிதையாய் மலர்ந்த மடலை
படித்த தோழி சொன்னார் இது காதல் மடல்

பெண்மனம் பெண்ணுக்கே புரியும்
உங்களை விரும்பிடும் பெண்-அவள்
உள்ளத்தை உடைக்காதீர்கள்
உங்கள் காதலைச் சொல்லுங்கள்

காதலான உள்ளம்-களிப்போடு இறக்கை விரித்து
வானில் பறக்க,கவிதை பாடும் நெஞ்சம் வானம்பாடியாய்
சிந்து பாடிக்களிக்க கனவுகளில் வானவில்லின் வண்ணங்கள்
மனதிலே மலைத்தேனாய் எண்ணங்கள்.



இதுதான் காதலா? ஆண்டாளின் பாசுரமா?
காதல் அறியாத மனதில் பூ மழை பொழிய
நிலவும், மலரும் அவள் முகம் காட்ட
இரவும், பகலும் நினைத்து நெஞ்சம் உருக
நெஞ்சுக்குள்ளே பொங்கும் புது வெள்ளம்
நினைவுகளில் கம்பனும், காளிதாஸனும்
காதல் கவி பாடும் எண்ணம்.

மடலுக்கு மடல் வரைய மங்கைக்கு
நான் எழுதும் முதல் கடிதம்
மனதில் உள்ளதெல்லாம் கவிதையாய் வடிய
இனம்புரியாத இன்பம் இதயத்தை நிறைக்க
உமாபதியாய் மாறி உள்ளம் ஆடிய சிவதாண்டவம்.

நீண்ட நாட்கள் களித்து, பதில் மடல் வந்தது
“என கடிதம் சொன்னது காதல் அல்ல
உங்கள் மேல் கொண்ட கௌரவம்
என் மடல் உங்கள் மனதை (ஏ)மாற்றியிருந்தால்
மன்னியுங்கள்-பெண் உள்ளம் புரியாத
குழந்தையாய் இன்னும் நீங்கள், பாவம்.”



கன்னியின் வார்த்தைகள் என்னைக் கழுவில் ஏற்றக்-
காதல் மனமோ கண்ணாடிபோல் நொருங்கிச் சிதறிட
அனலில் விழுந்த புழுவாய்த் தவித்து
தரையில் விழுந்த மீனாயத் துடிக்கும் இதயம்



புயலும், பூகம்பம் ஒன்றாய்ப் பூ மனதை சிதைக்க
புதைமணலில் விழுந்த புள்ளிமானாய் மனம் தவிக்க
என் காதல் சொர்கமே எரி நரகானது
சோகமே என்றும் என் சொந்தமானது.



அமுதாய் இனித்த காதல் ஆலகாலமானது
இதயம் சுவைத்த முதற் காதல் கனியும்
இறைவன் விலக்கிய அறிவுக்கனியாய் ஆனது
மலரும் முள்ளாகிட, கனியும் கல்லாகிட
மனமோ தீக்குளித்தது

அடிமை கொள்ளும் உறவல்ல காதல்
ஆனந்தச் சுதந்திரமளிக்கும் உறவு
காதல் அன்பின் ஐக்கியம்-**காதலில்**
காதலிதான் முக்கியம்

ஒருத்தியை மனதார விரும்பி, உயிரும்,
உள்ளமும் உருகி, ஒரு தலைக் காதலில் வீழ்ந்தாலும்
கடவுள் தந்தது காதல் வரமே



செடியில் இருக்கும் சுதந்திரம் மலருக்கு,
அழகை இரசிப்பதறக், மலரைப் பறிப்பது வன்முறையே
என் காதலும் அப்படியே

எங்கிருந்தாலும் வாழ்க என்று மனம் பாட
இமயச் சோகத்தால் மனம் தள்ளாட
மண்ணில் நடந்தவனை-கணப்பொழுது
விண்ணில் பறக்கவிட்டாள்-
சிறகொடிந்து சோகச் சகதியில் விழ,
காதலை புறக்கணித்தாள்-தேவதாஸாய்
கண்ணீரில் அலையவிட்டாள் பார்வதி

கேட்ட வரம் கிடைத்திட காதல்
வரமா, சாபமா என மனம் வினவித் துடித்திட
துன்பமும் இன்பமும் மனதை பண்படுத்த
காதலை அறிந்து கொண்டேன்,கடவுளுக்கு நன்றி சொன்னேன்

இன்னும் நான் அவளைக் காணவில்லை
இனியவளோ நினவில் உண்டு ஆனால் நெஞ்சில் இல்லை
இரு பிள்ளைகளின் தாயோ இன்னொருவர் மனைவி
தனிமையே என் வாழ்வின் நியதி?



காதலால் காயமான மனசு-காலத்தால் ஆறிட
வாழ்வில்தான் வானமாய்-பெருவரமாய்
இறைவன் தந்த பேரமைதி



காதலை அறியாத வாழ்வும் வாழ்வல்ல
காதலில்லாத வாழ்வும் வாழ்வல்ல
அன்பின் அழகிய பரிமானம்-
இரு இதயங்கள் ஒன்றிணையும் பரிணாமம் காதல்

கண்பார்த்து நெஞ்செழுதிய காவியம்
மனம் மகிழ்ந்து இதயம் செதுக்கிய சிற்பம்
விண் பார்த்து மனம் கேட்ட வரம்
மண் பார்த்த கண் கலங்க காதலோ பாடம்

காதலால் புண்பட்டுப் பண்பட்ட உள்ளம்
காதல் தெய்வீகம் என்று பண்பாடும்-வரமான
காதலால் பெருவாழ்வு வாழ்ந்தவரும் உண்டு
பிரிவால் கண்ணீர்க் கடலில் மூழ்கியவரும் உண்டு

மனம் விரும்பியவள் நல்வாழ்வே
காதலுக்கு நான் செலுத்தும் மரியாதை
காதல் தத்துவமல்ல விவாதிக்க-அறிவு கடந்த
இதயத்தின் அன்பு மொழி, சரணாகதி,

I do my thing, and you do your thing
I am not in this world to live up to your expectations
And you are not in this world to live up to mine
You are you and I am I
And if by chance we find each other, it's beautiful,
If not,it can't be helped-

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

நன்றி சொல்லும் உள்ளம்

யான் பெற்ற இன்பம் யார் பெற்றார் இவ்வுலகில்?
வான் மழை கண்ட பயிராய் மனம் செழிக்க,
தேன் மது உண்ட வண்டாய் உள்ளம் களிக்க
அன்பினால் இன்புற்று,
ஆனந்தப் பெருக்கால் உணவளித்து
அண்ணனாய் என்னை அன்பு செய்தாள்
அன்புத் தங்கை ஒருத்தி

சூடிய மலரும் வாடாது மணக்க
இட்ட குங்குமமும் கலையாது நிலைக்க
பூசிய மஞ்சளும் சுவாசத்தில் கலக்க
நெற்றித் திருநீறு நித்தியத்திற்கும் காக்க
வானவனை வேண்டி வாழ்த்துகிறேன்
என் தங்கையே-அம்மா நீ
சகல சௌபாக்கியங்களோடும்
பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என்று

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

நான்காம் மலம்

விடியலுக்கு முன் எழுந்து மலவண்டியோடு
ஊர்வலம் வந்து, வீடுகளில் மலமள்ளி,
காட்டில் புதைத்து, ஆற்றில் வாளிகளைக் கழுவி,
தெருக்குழாயில் தம்மைக் கழுவும் ஏழைகள்
கஞ்சும், கூழும் குடித்து வாழும் மனிதர்கள்

செருப்பு தைத்து-தூண்டில் போட்டு
சாக்கடை துப்புரவாக்கிக் கிடைத்த காசை-
மாலையில் குடும்பத்தோடு கள்ளுண்டு களித்து
கனத்த மனம் காற்றாய் மாறிட
இழிபிறப்பை பழித்து புலம்பியழும்
எளியவர் வாழ்வில் விடியல் ஏது?

ஒரு துண்டு பீடியை ஒன்றாய்ப்
புகைத்து நட்பை வளர்த்தோம்
ஒரு வெற்றிலையை நான்காயப் பங்குபோட்டு
ஒரு சாண் வயிற்றின் பசியை மறந்தோம்

மும்மலம் கடந்த வேதியர் மலமும் -எம் மலம்போல் நாறி
மூக்கைப் பிடுங்கிட சாதியம் பேசும் உயர் சாதி குருதியும்-எம்
குருதியும், ஒரே சிவப்பு நிறத்தை காட்டிட சூத்திரன் என்னும்
சாதியம் ஏனோ? சக்கிலியன் எனச் சூட்டுக் குறியும் எதற்கோ?

சந்தணமாய் வேதியர் மலம் மணக்கவில்லை-வெள்ளாளர்
குருதியும்-சிவப்பைத் தவிர வேறு நிறம் காட்டவில்லை
உழைக்கும் ஏழை எம் குருதியும் சிவப்பே, சலத்திலும்
மலத்திலும் வீசுவது துர்நாற்றமே

மூப்பும், பிணியும், சாவும் மாறாத வாழ்வில்
பசியும், பட்டினியும் என்றும் ஏழை எம் சொந்தம்,
செய்யும் தொழிலே தெய்வம் என்பது
சூத்திரருக்கு சொன்ன மந்திரமோ?

சூத்திரன் நிழல் பட்டாலும் தீட்டு என்பது ஆதி சங்கரர்
வரட்டுத் தத்துவமோ? விடியல் இல்லா வாழ்வில் விடியலாய்க்
குழி கக்கூஸ் வந்திட மலம் அள்ளும் தொழிலும் ஒழித்து
மனிதனாய் நடந்திட எழுந்தோம்

வழியெங்கும் முள்ளாய் சாதியத் தடைகள்
கழுவியும் போகாத-சதையில் இட்ட
சக்கிலியன் என்னும் சூட்டுக்குறிகள்

மும்மலங்களை கழித்தவர் –வேதியராய்
மோட்சம் கண்டார்-நாறி மணக்கும்
மனித மலத்தை நாளும் சுத்தம் செய்தவர்
நரகில் வாழும் சக்கிலியராய் இழிவு கொண்டார்

கங்கையில் குளித்தாலும் தீராத தீட்டாய், ஆணவம்,
கன்மம், மாயை கடந்த நான்காம் மலமாய் -சாதியம்?
சாதியம் கடந்தவருக்கே சத்தியம்
நீதியாவது (அ)சாத்தியமே?

தர்மம் அறிந்தவருக்கு சாதியமில்லை, அன்பு இறைவனுக்கு
நாமும் இறைமக்கள், வாயில் தோன்றிய பிராமணனும்
கையில் தோன்றிய-க்ஷத்திரியனும் தொடையில் தோன்றிய- வைசியனும்
பாதங்களில் தோன்றிய- சூத்திரனுமாய் போலிச் சாத்திரங்கள்

அரியணை அமர்ந்ததும் **ஸ்ரீராமன்** பாதணிகளே-
துதி பாடிக் , கூப்பிய கரங்களோடு
தொட்டு வணங்குவதும்-பெரியோர் பாதங்களே
"சூத்திர வடிவத்தையே"

இறைவன் திருவடி பட்ட மண்ணே திருத்தலம்
கல்லான உள்ளங்களில் கறைபடிந்த சாதியம்
ஒன்றே குலம் ஒருவனே தேவன்
மூத்த குடி மொழிந்த சத்தியம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

நட்பு

முடி நரைத்து உடல் தளர்ந்து மூப்பு நானடைந்தாலும்
நடை தளர்ந்து, கோல் பிடித்து நடந்தாலும்
ஒளி மங்கி விழி குன்றி பார்வை மறைந்தாலும்
ஒரு போதும் உன் அன்பை என் நெஞ்சம் மறவாது நண்பா

முக்கனியும், மலைத்தேனும் சுவையிழந்தாலும்
முத்தமிழாய் இனிக்கும் நம் நட்பு சுவையிழக்காது
முதுமை உடலுக்கே-நண்பா
இளமை என்றும் நட்பிற்கே அன்பா

வஞ்சி மகள் காதல் பொய்த்தாலும்
நெஞ்சுற்ற பள்ளி நட்பு ஒருபோதும் பொய்காது
நினைத்தாலே நெஞ்சில் இனிக்கும் நட்பு
நினைவிழந்தாலும் மறக்காது.

வானூரும் நிலவும், தேனூறும் மலர்களும் வாழும்வரை
நெஞ்சம் பூத்த நம் நட்பு மாறாது, மறையாது
என் நெஞ்சும் ஒரு போதும் உன்னை மறவாது

உயிர்காற்றாய், உள்ளோடும் குருதியின் சிவப்பாய்
நம் நட்பு-காலங்கள் பல போனபின்பும்
கற்பிழக்காத அன்புறவாய் நம் உறவு

மன்னனுக்கும், மாவீரன் கர்ணனுக்கும்
மனம் கலந்து பிறந்த மாசற்ற உறவு
கண்ணனுக்கும், குசேலனுக்கும் இடையே
இதயம் கலந்து பிறந்த கவிதையுறவு நட்பு

செம்மண்ணில் கலந்த மழையாய், பேருறவாய்
நம் நட்பு-பொன்னில் பதித்த வைரமாய்
என் நெஞ்சில் உன் நினைப்பு

இறை தந்த கொடையே-என் இதயம்
பொங்கும் நட்புக் கடலே என்றும் வளமோடு
பல்லாண்டு பல்லாண்டு வாழ்க நீ

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

ஆர்ஜென்டின நீர்மூழ்கிக் கப்பல்

கரைசேரும் முயற்சி பகல் கனவாகிட-
சுவாசிக்க வளிகாணும் முயற்சி
கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட முடவன் கதையாகிட,
நீர்மூழ்கியோடு-நாற்பத்தி நான்கு கடற்படையினரும்
ஆழ் கடலில் சமாதியாகிட-அழுது
ஆண்டவனை தொழுத சொந்தங்கள்
கண்ணீர் கடலில் மூழ்கிட்ட அவலங்கள்

மூழ்காத ஆர்ஜென்டினாவின் நீர் மூழ்கியும்
ஆழ்கடலில் மூழ்கிப்போனது-
பல நாடுகள் கூடித்தேடியும் கண்ணில் படாமல்
நீலக்கடலில் சமாதியானது

அலையும் கரை சேர்கவில்லை,
அழுது பிராத்தித்தும்- ஆண்டவனும்
ஏனோ மனமிரங்கவில்லை

ஆழ்கடலில் அவர்கள் உறங்கிட
அலைக்கரையில் உறவுகள் புலம்பி அழ
அழுதும் தீராதது உறவுகளின் சோகம்-பல்லாண்டு
போனாலும் நெஞ்சில் மூழ்காத நினைவானது

அலையில்லா ஆழ்கடலில் உறவுகளின் சமாதி
சோகம் அலை மோதும்-நெஞ்சில்
சொந்தங்களின் கருமாதி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

(அ)நீதி மன்றம்

வழக்காடு மன்றங்களில்-தர்மம் வாழ்கின்றதா ? சாகின்றாதா?
தெரியவில்லைவழங்கிய தண்டனைத் தீர்ப்புக்களால்
குற்றங்கள் குறைகின்றனவா? குற்றவாளிகள் மனந்திருந்தினரா?
புள்ளி விபரவியலுக்கும் புரியவில்லை

மட்டுநகர் வழக்காடு மன்றத்தில் காவல் துறை
கையளித்த வாகனங்களில் துவிச்சக்கரவண்டிகள்,
மோட்டார் சைக்கிள்கள், கார்கள், முச்சக்கரவண்டிகள்
டிரக்கடர்கள், லொறிகள் எனப் பல வாகனங்கள்

தேசியபொருளாதாரத்தின் பங்குகள் இவை
தேசியவுடமையானதா தெரியவில்லை? தேசப்பற்றற்ற நீதியால்
உப்புக்காற்றிலும், மழையிலும். வெயிலும், நனைந்தும்
காய்ந்தும் நாளும் துருப்பிடித்தழிவதை தடுக்க
வழக்காடு மன்றத்தில் வலுவான நீதியில்லை-

கண் எதிரே நாளும் தெரியும் அழிவைத் தடுக்க
கறுப்புக்கோட்டு மனிதர்களுக்கு திராணியில்லை
மனச்சான்றும் ஏனோ உறுத்தவில்லை

மனுநீதிச்சோழனின் மணியும் துருப்பிடிக்க,
மணிக்கயிறும் நைந்து வலுவிழக்க
கறுப்புக் கோட்டுக்களோடு-சட்டத்தரணிகள்,
கண்ணைக் கட்டடிய குருட்டு நீதிதேவதையின்
கைகளில் இன்றும் நியாயத் தராசுக்கள்

நீதியின் இருக்கையில் தர்மம் அறியாத
சட்டம் தெரிந்த நீதிபதிகள்-நீதிக்கு ஏது பதி?
இயேசுவுக்கு நேர்ந்த கதி
(அ) நீதியால் கிடைத்த வெகுமதி?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

நெஞ்சின் அலைகள்

அவளைக் கண்ட நாள்முதல்- ஏனோ
என் நெஞ்சுக்குள் பெருந்தவிப்பு,
மனசுக்குள் பூந்தோப்பின் புது மலர்வு,
சுவாசத்திலோ ஓஸோனின் இன்பக்கலப்பு,

சந்தோஷ சாகரமாய் இதயம் ஆர்ப்பரிக்க,
ஜானகியை கண்ட ஸ்ரீராமனாய் மனம் பூரிக்க
கானக்குயிலாய் கவிபாடிக் களிக்கும் மனம்
இதய வானில் காதல் கோலம் போடும் தினம்

வேல் விழிகளால் அவள் உழுது விதைத்த காதல்
விளைநில மனதில் விருட்சமாய்ப் பூத்துக் குலுங்க
மொழிகளால் என் மனமும்-காதலை
கவிதையாய் எழுதிக்களித்ததுவே

சொல்லிப் புரியாத காதல் வேதத்தை
பள்ளியறைப் பாடமாய் படித்துச் சுவைக்க,
காதலாகி நின்றேனடி கண்ணம்மா.
கடைகண் பாரடி என் செல்லம்மா

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

வட கொரியா-Kim-Jong-Un

அறியாமை இருளில் அப்பாவிக் குடிகள் அல்லாட
அராஜகச் சர்வாதிகாரம் நாட்டை ஆள
வம்சாவழி அதிகாரம் ஜனநாயக்தை அழிக்க
அணுவாயுதப் பரிசோதனைகளால்
உலகை அச்சுறுத்தும் வடகொரியச் சர்வாதிகாரி

எழுபது சதவீத மக்கள் பட்டினியால் தவிக்க
நாற்பது சதவீத மக்கள் போஷாகின்றி நலிய
ஜனநாயகம் மறுக்கப்பட்ட நாட்டில்-சர்வாதிகார
ஆட்சியை நிலை நிறுத்த-சிறை கூடங்களும்,
சித்திரவதை முகாம்களும்.

ஆயுதங்களைக் குவித்து, இராணுவத்தைப் பெருக்கி
அமைதியை குலைக்கும் அராஜகச் சர்வாதிகரி,
அணுவாயுதப் பரிசோதனை நடத்திடும் அவலம்
அமைதிச் சித்தாந்தத்தை மறுதலிக்கும் துயரம்.

அழிவின் பாதையில் அமைதியில்லை
அப்பாவி மக்களுக்கோ நிம்மதியில்லை
மனித உரிமைகளுக்கோ சிறைவாசம்
மக்கள் இதயங்களில் அச்சமே வாசம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

ஒரு மொழி சொல்லாயோ

என்னைக் கொல்லும் ஏனிந்த மௌனம் பெண்ணே,
உன்னால் உயிரை கொல்லும்
காதல் துயரம் என்னுள்ளே என் கண்ணே

உறங்காமல் விழித்திருந்த தொலைபேசியும்
உடலோடு ஒட்டிக்கிடந்த அலைபேசியும்
உன் ஒரு மொழிக்காய் தவமிருக்க
ஏனிந்த மௌனம் பெண்ணே

பிரியமாய் இருந்தவளும்-என்னைப் பிரிந்துபோனாள்
உதிரமாய் ஓடி என்னுள் நிறைந்தவளும்
என்னை மறந்து உறைந்து போனாள்.

விடியாத இரவுக்குள், இதயம் தடுமாற
மலராத மொக்காய் மனம் நோக
என் உதயமே எனை மறந்ததே
ஒரு மொழியம் பேச மறுக்குது.

வாழ்வதும் உன்னால், சாவதும் உன்னால்
வசந்தமே நீ போனபின் -வாழ்விலே
நிம்மதி காண்பது எந்நாள்?

துடிக்கும் இதயம் அவளுக்காய்த் தவிக்க
என் சுவாசக்காற்றே-நீயின்றி
என் உயிர் மூச்சும் ஒடுங்க
ஏனடி இந்த பாராமுகம் பெண்ணே!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

ஒரு பொழுது வாழ்வு

விண்மீன்கள் கண்ணயர, வெண்ணிலவும் துயில் கொள்ள
பொன்கதிரேன் தழுவித் தட்டி எழுப்ப
வண்ண இதழ்கள் வரிசையாய் ஆடி அவிழ
தென்றலுக்கு வாசம் பூசி கண்மலரும் வண்ணமலர்கள்.

வண்டும், தேனீயும் மலர்த்தேன் அருந்தி ரீங்காரம் பாட
வாசத்தென்றலும் தழுவிக் கொண்டாட மலர்ந்த வாழ்வு-
மாலையில் வண்ண இதழ்களும் வாடிச்சோர்ந்து
சோபையிழந்து உதிர-நெஞ்சிசே சொட்டும் உதிரத்துளிகள்.


வண்ணமலர்களின் ஒரு பகற்பொழுது
வாழ்வோ பரவசத்தை மூட்டி
அந்தியில் கண்ணீரை வரவழைக்க
பல்லாண்டு வாழப்பிறந்த இளைய தலைமுறை
குண்டு துளைத்தும்-கபாலம் சிதறியும்
குருதி சிந்தி மாண்டிடக் கண்டு
நெஞ்சு பொறுக்கவில்லை, விழிநீர்
சிந்த கண்களும் மறுக்கவில்லை

இன்றும் எண்ணித்துடிக்க இதயமும் மறக்கவில்லை
அண்ணனும், தம்பியும் அகாலமரணமடைந்த நிலை
என் உயிரை கொன்றநிலை-இறைவா
இதுதான் விதியா? ஏற்கத் தவிக்கும்
இதயத்தின் பரிதாப நிலை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023


ஒரு பால் காதல் உறவு

இல்லறமாய் மலர்ந்து இன்புற -அன்னை தந்தையாகி
குழந்தை செல்வம் ஈந்து, குலம் வளர்க்கும்
கோலாகல குடும்ப நிகழ்வாக
ஆண், பெண் இருபால் காதல் உறவு
படைப்பும் இவர்களால் தொடர்ந்திட-இது
இயற்கை அமைத்த இன்ப உறவு


"யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம் முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ் வழி அறிதும்?
செம் புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே."

மாறிவரும் உலகில் காதலும் கோலம் மாறிட
ஒரு பால் காதலை உலகம் ஏற்றிட
கனிகொடா உறவு கடவுளுக்கு அருவெறுப்பானது
மதங்கள் சாடிட-பல நாடுகளில் இன்று
ஒரு பால் திருமணம் சட்டமான அதிசயம்

ஒளிவு மறைவான உறவாய் ஆதியில் இருந்தது
இன்று உலகறியும் ஒன்றானது
ஒருபால் மானுடத்தையும்- உலகு
மதிக்கும் நிலைக்கானது.


இருந்தமையும், அது போலவே இந்து புராணமான, கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய கந்த புராணம் பாகம் 5, 2. அசுர காண்டம், 32. மகா சாத்தாப் படலம், 29 ஆவது பாடலில், திருமாலை பார்த்து, சிவபெருமான், உன்னைக் புணரும் வேட்கை எமக்கும் உண்டு; நீ கொண்ட வேடம் மிக இனிது என்கிறார். அதற்கு பாடல் 33 இல், திருமால், சிவபெருமானை நோக்கி, ஆடவர் ஆடவரோடு கூடும் வழக்கம் இல்லை. ஆதலால் எம்பெருமானே! நீர் அடியேனை புணர்தல் முறையோ? என்று கேட்பதை காண்கிறோம்.

"அன்பில் ஆடவர் ஆடவ ரோடுசேர்ந்
தின்ப மெய்தி யிருந்தனர் இல்லையால்
முன்பு கேட்டது மன்று முதல்வநீ
வன்பொ டென்னைப் புணர்வது மாட்சியோ" [1463]

ஆண்,ஆண் காதலும், பெண், பெண் காதலும்
அதிசய ஆச்சரியமானது
உடற்கூற்று மருத்துவத்திற்கும்,
மனோவிஞ்ஞானத்திற்கும் புரியாத புதிராய்
படைத்தவனை வியந்து நோக்கும் அதிசயம் இது.

ஹரனும், ஹரியும் புணைந்திட தோன்றிய
செல்வம்-ஐயப்பனும் ஆச்சரியமே
இந்த அபூர்வக் காதலை
ஆதியில் புராணம் சொல்லியதும் அதிசயமே

அன்பில் ஆடவர் ஆடவரோடு சேர்ந்
தின்பமெய்தி யிருந்தனர் இல்லையால்
முனப்பு கேட்டது மன்று முதல்வ நீ
வன்பொடென்னைப் புணர்வது மாட்சியோ

கருக்கலைப்பு இல்லை, விவாகரத்தின் விஷமில்லை
வளர்ப்பு பெற்றோராய் இருவரும் மாறிட
வனப்பாகும் குடும்ப உறவு இது
இது-விளைச்சலில்லாக்-காய்ந்த பாலையல்ல
சபிக்கப்பட, கனிகொடா அத்தி மரமமில்லை

இலக்கணம் கடந்த மரபுக் கவிதை தாண்டிய
புதுக்கவிதை, இங்கு நிலவில்லா வானில்
நட்சத்திரங்களின் கொண்டாட்டம்
மலரில்லாப் பொய்கையில் மதுவண்டுகளின் ரீங்காரம்?

அன்பு நடமாடும் வீட்டில் ஒரு பாலே இருபாலான அதிசயம்
மனைவி துன்புறும் அவலம் இங்கில்லை
குடித்து வெறித்து-குடும்பத்தைச் சீரழிக்கும் துன்பம் இல்லை
குழந்தைகள் துன்புற விவாகரத்து இல்லை.

ஒரு பால் திருமணத்தால் உயிர்க் கொல்லி
எயிட்ஸ நோய் குறைந்திட
தனிமை படுத்தப்பட்ட பாலினங்களும்
விடுதலை வாழ்வு வாழ வழி பிறந்தது

மைவிழிகள் மயங்கிக் காதல் சொல்ல,
வேல்விழிகள் இதயத்தை குத்திக் கொல்ல
காதலில் தோல்வியுற்று தேவதாஸாய்
புலம்பிடும் நிலை இங்கில்லை போலும்?

ஒரு பால் காதல்-ஒரு வழிப்பாதையே
பாடிடும் எனக்கும் இந்த பரகசியம் புரியவில்லை
இவர்களும் மனிதர்களே-இவர்களின்
காதலும் புனிதமே- மானிடமே!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

ஒரு முறை உன்னை பார்கவேண்டும்

ஒரு முறை உன்னைப் பார்கவேண்டும்-
அருகிலமர்ந்து ஆயிரம் கதைகள் பேசவேண்டும்
வண்ணப்பூக்களாய் காதல் கவிதைகள்
நூறு சொல்ல வேண்டும்-

கன்னங்கள் சிவக்க, கயல்விழிகள் நாணி மயங்க-
வண்ணங்கள் வாசமேனியில் புதுகோலங்கள் போட
முல்லைப் பற்களும், முத்துச்சிரிப்பும்
என்னைக் கொள்ளை கொள்ள
உன் அழகை ஓவியமாய் வடிக்க வேண்டும்

காதல் நிலவாய் என் நெஞ்சில் நீ உலாவர
அலையலையான கார் கூந்தலில்
ஆயிரம் வாச மலர்கள் நான் சூடி
அன்பே, காதல் அர்சனை செய்யவேண்டும்

என் இதயக்கோயிலில் காதல் தேவதையாய் நீ
எழுந்தருளவேண்டும்-பக்தனாய் நானும்-என்
தேவியாய் நீயும் வாழும் காதல் நிலை வேண்டும்.
மாறாத காதல் பரவசம் வேண்டும்

பூங்குழல் முகர்ந்து, என் தேன் குழல் நாண
கயல் விழி மூடி குறுநகை பூக்க
நூலிடைபற்றி நூதனமாய் உன்னை அணைத்து
குமுத வாயில் அமுதம் பருகவேண்டும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

ஒருத்தி ஒருவனை மறந்து விட்டால்

ஒருத்திக்காய் உருகி வடித்த காதல் கவிதைகள்-
மங்கிப் பழம் காகிதங்களாய் மாறிட
என் வண்ணக் கனவுகள் நிறமிழந்து வெளிறிட
இதயமெங்கும் காதல் களைகள், நூலாம்படைகள்
கண்களிலோ கார்கால மழைத்துளிகள்

என் பூவனம் வாடிப்போயிட
என் வானவில் வண்ணமிழந்து கலைந்திட
என் பூந்தோப்பில் ஒற்றை குயிலின் ஓயாத கானம்
என் உடைந்த புல்லாங்குழலில் முகாரி ராகம்

வாழ்விலே அழகிய தனிமை
தன்னை அறிந்திட தவமிருக்கும் நிலைமை

பார்த்து இரசிக்க யாருமின்றி பாடிப் புகழக்
கவிஞரின்றித் தனிமையில் உலவும் எழில் நிலா
சூடி மகிழ யாருமின்றி பூத்துச்சிரிக்கும்
வாசமலர்கள், கேட்டு மகிழ இரசிகன் இன்றி
கரைந்து பாடிக் களிக்கும் புள்ளிக்குயில்கள்

வாழ்வுதான் எத்தனை அழகானது ,
அதிசயங்கள் நிறைந்தது
படைத்தவன் தந்த பெரும் பரிசு வாழ்வு
புரிந்தவர் இறை கருணையை இரசித்தே வியந்தார்
மற்றவர் பார்வையிழந்த குருடராய் நடந்தார்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

பாடி அழைத்தேன் உன்னை

என் காதலை மோனலிஸாவை ஓவியமாய் வரைந்திட,
கண்ணுக்குள்ளும், நெஞ்சுக்குள்ளும் நிறைந்தவளே
என் இதயத்தை திருடிச்செல்ல, காதலாகி மனம் கவிதைபாட,
அழகின் அதிசய வண்ணச் சேர்க்கையாய் அவள்

பொட்டு வைத்த வட்ட நிலவோ இவள்
புன்னகையில் கண்சிமிட்டுவது கொற்கை முத்தோ?
குமுத வாயில் பருகத் தருவது அமுதோ-என்னைப்
படரத் துடிக்கும் கன்னி முல்லைக் கொடியோ?

நாணிச் சிவந்த கன்னங்கள் செம்மாங்கனியைச் சொல்ல,
ஆனிப்பொன் மேனியில் அழகு வண்ணக் கோலங்கள் போட
கண்ட முதல் நாளில்-காமன் கணைபட்ட நெஞ்சம்-
கன்னியவள் இதயத்தில் கோரியதோ காதல் தஞ்சம்

காணும்போது விழிகள் தழுவி மகிழ-இதயம்
புள்ளி மான்களாய்த் துள்ளிக் களிக்க,
இமைக்க மறந்த விழிகள், துடித்து தவித்த இதயம்
இறைவன் எனக்காய் படைத்த ஏவாள் இவள்தான்
பார்த்துப் பரவசத்தில் திளைத்த நெஞ்சம்

பார்க்த் திகட்டாத பேரழகு என்னைப் பரவசத்தில் ஆழ்த்திட
காதல் கொண்ட இதயம் கவிஞனாய் மாறிட-
பொய்கையான நெஞ்சத்தில் ஆயிரம் இதழ் தாமரை பூத்திட
இதயம் காதல், காதல் என்றே ஆனந்தக் கூத்தாடியது

பலமுறை, பார்த்தும், சிரித்தும், பேசியும், கதைத்தும்
ஒரு முறையேனும் காதலைச் சொல்லத் துணிவில்லை
காலங்கள் கடந்து போனது-பின்நாளில்
சொல்ல மறந்த காதல் தீராச் சோகமானது.

என் காதலை அவள் மறுத்தால் சோகமே
என்னைக் கொல்லும், வெள்ளிடை மலைபோல தெரிந்த
என் உள்ளத்து உணர்வுகளை சொல்லிட
வார்த்தைகள் எதற்கு? என் விழி மொழிகளே போதும்

பூவாய் மலர்ந்த என் காதலை பூத்துச் சொல்லப்-பூவையே நீ
புரிந்தால் போதும் என் வாழ்வு மலரும் என இதயம் துடித்துத் தவிக்க
கண்டும் விழிக்கவில்லை, கவிதையாய்ச் சொல்லியும் வியக்கவில்லை
சொல்லத் துணியாத காதல் இமயச் சோகமானது

காலம் என் கனவுகளை கலைத்திட, சொல்ல நினைத்த
காதலைச் சொல் , சொல் என இதயம் துடித்திட
கடல் கடந்து என் அழகு, கண்மறைந்த நிலவான என் உலகு

இருவிழிகளிலும் கங்கை பாய்ந்தோட-
எங்கிருந்தாலும் வாழ்க என இதயம் வாழ்த்திட
என் ஒரு தலை இராகம் முகாரியானது-காதல்
என்னுள் புதைந்த இரகசியமானது.

சொல்லத் துணியாத காதலும், சொல்ல மறந்த கதையானது
சோகச்சுனாமியும், சூறாவளியும் ஒன்றாய் நெஞ்சைத் தாக்கிட
என் காதலும் நெஞ்சில் தூங்காத நினைவானது.
விழிக்கும்போதெல்லாம் , என்னைத் தீய்க்கும் நரகானது

சோக இருளில் மூழ்கிய என் இதயத்தில் இன்றும் வெண்ணிலாவாய்
அவள் நினைவு-பாலையான இதயத்தில் பசும் சோலையாய் அவள் கனவு.
இதயம் எழுதிய மோனலிஸா ஓவியம், வண்ணம் கலையாத
காதல் காவியம் எங்கோ தொலைந்துபோனது

முகவுரையும், முடிவுரையம் இல்லாத
என் முதல் காதலும் நெஞ்சில் ஆறாத காயமானது
ஒற்றை குயிலாய் கூவி கரையும்-காதல் மனம்-
இன்றும் அவளைத் தேடுது.

பார்த்தும் பலமுறைபேசியும்-என்னைப்
பார்க்கத் தவிக்காத, பூக்கத் துடிக்காத பூமகள் இதயம்
பரவசம் சொல்லாத உதயமாய் ஆனது
விடியலின்றி காதல் இதயம் இருளில் வாடுது

பூவிழிகளை மொய்த்து, காதல் அமுதின்றி இதயம் புண்ணானது.-
இதயப் புல்லாங்குழலில் காதல் இசை பாடிய தென்றலும்,
சொல்லாமல் மாயமானது, சோகம் எனை ஆள,
என் சொர்க்கமே கானல் நீரானது, தீய்க்கும் எரி நரகானது.

காதல் அகழ்வாராய்சியில்-காயமான இதயங்களைத்
தோண்டிப்பார்த்திட-எங்கும் வண்ணம் கலைந்த ஓவியங்கள்
வடிவம் குலைந்த மூளிச்சிற்பங்கள் கண்ணீர்க் காவியங்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023


பரதேசியின் பயணம்





காலம் என்ற மணற்பரப்பில்-என் காலடித்தடங்களை
வாழ்வின் அலைகள் அழித்திட, வந்த சுவடின்றி,
வாழ்ந்த காலமின்றி உண்மைத் தேடலாய்த் தொடங்கிய
ஒரு பரதேசியின் பயணம் இது.

தளைகளை அறுத்துக் காலம் தந்த
இரவல் அறிவைக் கழித்து, என்னை வெறுமையாக்கி
வாழ்வை ஒரு தேடலாக்கி என்னை கண்டு கொள்ள
எனக்குள் என் பயணம்.





குரு இன்றி, வழிகாட்டி இன்றி , ஞானக்குறியீடுகள்
வழிப்பாதை காட்டிட- தொடரும் பயணம்.
உண்மையில் "நான்" என்று ஒன்றில்லை
இருப்பது ஒன்றே.
உதயமும், அஸ்தமனமுமாய், இருளும், ஒளியுமாய்
பிரக்ஞ்சையும், பிரக்ஞையின்மையுமாய்
இரண்டும் கலந்த பிரபஞ்சம்

ஆசை, அறியாமையால் விழுந்து, எழுந்து
அனுபவம் ஒளிகாட்ட, மொழி மௌனம் காக்க
ஆனந்த அமைதி ஆட்கொள்ளப்-பிரபஞ்சவெளியில்
தனியனாய் என் பயணம்.






சின்னஞ்சிறு நாவில் அறுசுவை அரும்புகள்
செவிகளில் ஏழு ஸ்வரங்களின் இன்னிசை
மணநுகர்ச்சியில் நூறு வாசங்கள்
விழிகளில் ஆயிரம் வண்ணக்காட்சிகள்
எண்சான் உடம்பில் கோடி ஸபரிசங்கள்
மாயையான மனதில் ஆணவத்தின் ஆட்சிகள்



குழந்தைகளும், வண்ணமலர்களும், விரிந்து பரந்த இயற்கையும்
இரவு வானமும், இரையும் கடலும், பாடும் புள்ளினங்களும்
ஓடும் நதிகளும், உறைபனியும்
எங்கும் கொட்டிக்கிடக்கும் ஆனந்த ஆச்சரியங்கள்.
எல்லாம் என்னுள்ளே

சாட்சியாய் நின்று காண்பவன் காண்கின்றான்
எது வெளி எது உள்
எல்லாம் தோற்ற மயக்கங்களே







அன்பு, காதல், காமம், கருணை, ஞானம், முக்தி
பயணத்தில் பல மைற்கற்கள்.-பிரபஞ்ச பிரக்ஞ்சையின்
பரிணாமங்கள்-பரிமானங்கள்.

ஐம்புலன்களும், பகுத்தறிவும்-சாரதியில்லாத்
தேர்க் குதிரைகளாக-அலைக்கழிந்த வாழ்வில்
எண்ணற்ற தோல்விகள் என்னைச் செதுக்கிட
மிளிரும் உட்தோற்றம்.


நதியாய் ஓடி கடலை சேரும் பயணத்தில்
மலையில் நின்று விழுந்து, பள்ளங்களை நிறைத்துப்
பணிவை அறிந்து பரந்து விரிந்த கடலை நோக்கி
பாதை அறியாத பள்ளமான பாதையில்
ஓடும் நதியாய் பரதேசியின் பயணம்.






அலை கடல் ஆர்வத்தோடும் ஆச்சரியத்தோடும்
அள்ளி அணைத்து வரவேற்க-சங்கமத்தில்
“நான்” அழியும் ஆனந்தம்,
நதி கடலாகும் பேரின்பம் -சச்சித் ஆனந்தம்.

எல்லாம் மாறும் உலகில்-எல்லாம் மாயையே
நானே நதி -நானே கடல் -நானே நீர்





இரையும் அலையும், ஆழ்கடலின் மௌனமும்
ஒன்றாய்ப் பிரபஞ்சகானம் இசைத்திட
கொலுசோடு நடைபோடும் நதி-கட்டித்தழுவிட
விண்ணோக்கி கரம் விரித்த பெருவிருட்சங்கள்
வா, வந்தமர்ந்து ஓய்வு கொள் என அழைத்திட
அன்பின் அழைப்பை ஏற்ற மனம்
ஓய்ந்து அமர்ந்து ஆனந்தம் கொள்ள
சித்தார்த்- புத்தனாகி மலர்ந்த ஞானப்பயணம்.

உள்ளுணர்வின் உன்னத மலர்ச்சியே ஆன்மீகம்-
ஒவ்வொரு மனிதனுள்ளும்
புத்த நிலை-கிறிஸ்து நிலை, கிருஷ்ணா உணர்வு நிலை
இருப்பெனும் பெருங்கடலில் எழுந்த
விழிப்புணர்வின் பேரலைகள்
கடலும், அலையும் வேறல்ல ஒன்றே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-05-2023

பார்வைகள் பலவிதம்

அழகிய மனைவியோடு ஆலயம் தாண்டி நடந்திட
அழகி ஒருத்தி கண்ணில் பட
என்னே அழகென வியந்த மனம்
மனதில் மற்றோர் காதலின் துளிர்ப்பு
ஏதோ ஒன்றை இழந்த தவிப்பு

ஆணழகனாய் கணவன் ஆடம்பரவாழ்வு,-இருந்தும்
சினிமாவில் வந்த கட்டழகன் நெஞ்சை கிளுகிளுக்க
என்னே ஆண்மை மனம் வியக்க நெஞ்சிலே புதுவிதத் தவிப்பு.
பார்வையால் அணைத்திடத் துடிப்பு

தாயும் குழந்தையும் கொள்ளை அழகு
கொண்டாடி கொஞ்சி மகிழ்ந்த அன்னையையும்
குழந்தையையும் குதூகலத்தோடு பார்த்த மகிழ்ந்த அன்னை,
ஒழுகிய மூக்கோடும், அழுக்குச் சட்டையோடும்
நின்ற தன் மகனை அள்ளியணைத்து
என் ராஜா- என் செல்லம் எனக் கொஞ்சித் துடைத்தாள்

நெஞ்சமெல்லாம் பாசம் பொங்க
நீராட்டிப் பாராட்டிப் புத்தாடை அணிவித்து
நீதாண்ட பேரழகு என் ராஜா பாசமழை பொழிந்தாள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-05-2-23

பிறவாமை வேண்டும்

பிறவாமை வேண்டும்-மீண்டும்
பிறப்புண்டென்றால் பெருமானே
நின்னை மறவாமை வேண்டும்

மண், பொன், மாது உறவில்-
மனம் மயங்காப் பெருநிலை வேண்டும்
உள்ளம் நாளும் பொழுதும்
உன்னை எண்ணி தொழுது மகிழும்
திருநிலை வேண்டும்

உன்னால் ஆட்கொள்ளப்படும்
ஆனந்த நிலை வேண்டும்-தாயே! என்
தந்தையே! என்றும் உன் திருமகனாய்
வாழும் திரு நிலை வேண்டும்

உண்மையும், அன்பும், ஆனந்தப் பணிவும்
விழிப்புணர்வும் என் இயல்பாக
எல்லையில்லாப் பேரன்போடு-எல்லாமுமாக,
எல்லாவற்றிற்கும் மேலாக
உன்னை அன்பு செய்யும் நிலை வேண்டும்,
உன்னை அன்பு செய்யத் தடையாயிருக்கும்
அனைத்தையும், நான் இழக்கவும், மறக்கவும்,
நல்மனத்தோடு துறக்கவும் வரம் வேண்டும்

என் உள்ளம் நீ வாழும் கோயிலாகவேண்டும்
உன் அன்பு நதி என் வழியாய் நாளும் பாயும்
இன்ப நிலை வேண்டும்-
உன்னதங்களில் இறைவனுக்கு மகிமையும்
உலகில் நன் மனத்தவருக்கு அமைதியும் வேண்டும்

தூய மனத்தவருக்கு உன் தரிசனம்
எளிய மனங்களில் உன் ஆட்சி
என்றும் நிலைக்க வேண்டும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-05-2023

பொய்கை

சேற்றில் புதையுண்டு கிடந்தேன்
செங்கமலப் பொய்கையாய் மாற்றி மகிழ்வித்தாய்,
புதைமணலில் அழுந்திக்கிடந்தேன்
விளைநிலமாய் மாற்றிக் குதூகலித்தாய்

கூண்டுக்கிளியாய் அடைபட்டுக் கிடந்தேன்-
விடுதலை தந்து வான வெளியில் பறக்கவிட்டாய்,
ஒற்றைக்குயிலாய் கரைந்தழுதேன்
சோடிக்குயிலாய் வந்து வாழ்வளித்தாய்

வான் மழை காணாப் பயிராய் வாடிக் கிடந்தேன்-
அன்பு மழை பொழிந்தாய்
தேன் மலர் காணாத் தும்பியாய் தவித்தேன்
அன்பால் என்னை நாளும் போஷித்தாய்

ஆணவ இருளில் மூழ்கிக் கிடந்தேன்
கதிராய் உதித்து என் காரிருள் கலைத்தாய்
சத்தியமாய் என்னுள் பூத்து-உத்தமனே
அன்பால் என்னை மகிழ்வித்தாய்

என் சித்தம், நினைப்புச், செய்கையெல்லாம் உனதாக
உன்னடிமை நான் என்றேன்
என்னுள் உன்வாசம்- இறைமகனாய்
என் உல்லாசம்

நன்றி, நன்றி, நன்றி, என்
இறைவா நன்றி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-05-2023

பூக்களைப் பறிக்காதீர்

பூக்களை பறிக்காதீர்-வண்ணமலர்களின் வாழ்வை
அழிக்காதீர்-ஒரு பொழுது வாழும் பூக்களின் வாழ்வை
பொழுது சாயுமுன் பறிப்பது நியாயமா? தாயும் சேயுமாய்
வாழும் மலர்களை செடிகளினின்று பிரிப்பது நியாயமா?

மதுமலர் கூந்தல் எனக் கவிபாட-கூந்தல் மணம்
இயற்கையா? செயற்கையா? என இறையனாரும்,
நக்கீரனும் வாதாட, பூச்சூடும் பூவையரால் பிறந்த விவாதம்
பூக்களுக்கோ மறுக்கப்பட்ட நியாயம்

வண்டுக்கும், தேனீக்கும் அமுதளித்து விருந்தோம்பும்
வண்ணமலர்களின் வாழ்வை -பூவையர்
கூந்தலில் சூடவும்- சாமிக்கு சாத்தவும்
மலர்மாலையாய்ப் போடவும்
இறைவன் படைக்கவில்லை-

ஒப்பற்ற வண்ணமும், அழகும். வாசமும்
யாருக்கும் இறைவன் கொடுக்கவில்லை
மன்னன் சாலமோனும் பூக்களைப்போல்
ஆடை அணிந்திட கொடுத்து வைக்கவில்லை

பூக்களுக்கும் வாழ உரிமையுண்டு, பூக்களை பறித்தலும்
கொலையே, சிலைகளுக்கு சாத்தலும் நரபலியே
ஹிம்சை செய்யாதீர் மானிடரே
பூக்களை வாழவிடுங்கள்.

தேனீயும், வண்டும் -தேனருந்தும் போதும் பூக்களை
துன்புறுத்துவதில்லை, தேனீக்கும், வண்டுக்கும்
தெரிந்த சாத்வீகம் பகுத்தறிவு படைத்தவனுக்கு
தெரியவில்லை, அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை
மனிதன் இன்றும் மனத்தால் மிருகமே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-05-2023

பூ விழி வாசலில்

குமுத வாயில் பூத்த அமுதப் புன்னகை
என் நெஞ்சைத் தொட-நங்கையே, அழகு மங்கையே
புன் நகையின் விலை என்னவோ?
குறும்பாய் நான் வினவினேன்

காதல் இதயம் சொன்ன விலை
கன்னியும் வேடிக்கையாய்ப் பதிலளிக்க
இதயம் படபடக்க ஏங்கி நின்றேன்
உதயம் கண்ட மலர்போல் உவகையால் விரிந்து
உள்ளம் சூடத்தவித்து நின்றேன்

கன்னங்கள் கனிந்து சிவக்க, கயல்விழிகள்
காதலை இசைக்க, செவ்விதழ்களிலோ பழரசம் இனிக்க
மலரளந்த கூந்தலில் பூ வாசம் மணக்க
மெய்மறந்து, மொழி மறந்து பரவசமானேன்

விழிகள் விழிகளை தழுவிப் பரவசம்கொள்ள
இதுவரை அறியாத பேரின்பப் பரவசத்தில்
இதயங்கள் மூழ்கித்திளைக்க காதலாகிப்போனோம்.
இறக்கைகள் முளைத்திட காதல் கிளிகளாய்
காதல் வானில் எழுந்து பறந்தோம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-05-2023

போதையும் பேதையும்

இளமையில் தந்தை அகால மரணமடைந்திட, உறவுகள் கை நெகிழ்ந்திட
வறுமையால் அழகிய இளந்தாயும் விலைமகளாய் கோலம் மாறிட
அன்னை ஆடை களையும் நாளெல்லாம் வயிறு நிறையும்
தாயின் வாழ்வோ சோகத்தால் நிறையும், மங்கலம் குலையும்





காலங்கள் உருண்டோட-நாளும்
வேலைதேடி அலையும் பட்டதாரியாய் வாழ்வு
தெய்வத் தாயை தீராத நோய் வாட்டிட வந்த தீடீர்ச் சாவு
விரக்தியால் போதைக்கு அடிமையான மகனின் இழிவு

நாளும் தெருக்களில் நாசுக்காய் ஆங்கிலத்தில் பொய்கூறி
பணம் பெற்று பிழைக்கும் நாதியற்றவன் வாழ்வில்
உறவு சொல்ல ஒருத்தியாய் வந்தவளோ விலைமகள்.

அழகும், அநாதரவான நிலையும் கலைமகளை விலைமகளாக்கிட
விற்றுப்பிழைக்கும் உடலும் வெட்கம் மறந்து விறைத்திட
பட்டமரமாய் நின்றவள் நெஞ்சில் பசுந்தளிராய்த் துளிர்த்த முதற் காதல்

கல்லான அகலிகை **தெரு**ராமன் சொல்பட்டுப் பெண்ணாக
உடல் தழுவும் மனிதருக்குள்-உள்ளம் தழுவிய முதல் மனிதன்
சொன்ன காதல் கேட்டு பூத்துச் சிலிர்த்த நெஞ்சம்
அச்சம், மடம், நாணத்தின் அழகைச் சூடி
காதலாகி நாணிக்கனிந்து கோரிய காதல் தஞ்சம்

அன்னையின் அவலநிலை அறிந்தவன் அபலைக்கு உறவாக
அன்பாய் மலர்ந்த உறவும் காதலாய்த் துளிர்விட
தோழியாய் வந்த விலைமகளும் தோள்சாய்க வந்த உறவால்
முதல் மனிதனை கண்ட மனுஷியாய் நாணி மலர்ந்தாள்



நிலவு உலவும் பொழுதில்-தெருவில் அழகோ விலைபோகும்
விலைமகளுக்கு குலமகன்கள் வாடிக்கையாளர்
பாலியல் வியாபாரம் வயிற்றுப் பிழைப்பான விவகாரம்

ஒரு நாள் நிலவொளியில்-தெருமுனையில்
சந்தித்த இதயங்கள் பேசி மகிழ
காரில் வந்த கறுத்து தொந்தி பருத்த செல்வன்
காதலியை காமம் தணிக்க அழைக்க,
விலைமகள் காதலுக்கு வந்த விபரீதச் சோதனை.
அம்மணமான திரௌபதியாய் மனதில் வேதனை



குலுங்கிய வாகனம்-நெஞ்சைக் குலக்கிட
ஆற்றாமையால் நெஞ்ச வெடிக்க-ஓ வென
முகம் பொத்தி அழுத ஏழைக் காதல் மனம்

விலைமகளாய் யாரும் பிறப்பதில்லை
குலமகளாய் வாழ்வு கொடுக்க-
திருமகளோ கண்ணில் படாத நிலை

வீசிய நோட்டுக்களில் வீதியில் விழுந்திட
விழுந்த நோட்டுக்களை அள்ளி பொறுக்கியவளை
அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினான்

பார்வைகள் சந்தித்தபோது பரிதாபம் மிஞ்சியது.
விம்மிய நெஞ்சங்களில் ஈட்டி பாய்ந்த வலி
ஈரவிழிக் காவியமான ஏழையர் வாழ்வில் எங்கே ஒளி?

வேல் பாய்ந்த நெஞ்சோடு வேல்விழிகளும் வெட்கிக் கூனிக்குறுகிட
நீர் பாயும் விழிகளில் வெட்கமும், துக்கமும், அவமானமும்
விம்மலாய் வெளிப்பட, ஓடிச் சந்தியில் ஒளிந்து மறைந்தவளை
ஈரவிழிகளோடு பார்த்தவன் தன் இழிந்த இயலாமையை
எண்ணி துக்கித்து வெட்கி, ஓவென்று கதறி அலறினான்



தாயும் சுகம் பெறவில்லை, தாரமாய் எண்ணியவளுக்கும்
வாழ்வு கொடுக்க ஏழையாள் முடியவில்லை -விம்மியழுதான்
தெருவிலே உண்டு தெருவிலே பிழைத்து வாழும்
தெருப்பொறுக்கியையும் காதலித்த தேவதையின் பரிதாப வாழ்வு
இதயத்தை நொருக்கிட மெல்லச் சாய்ந்தான்

மறுநாள் நாதியற்ற பிணத்தை நகரசபை அள்ளிச்செல்ல
குழுமியிருந்த கூட்டத்தில் நுழைந்து பார்த்தவள்-
பார்த்தாள் பரிதாபமாய் மாண்ட காதலன் பிணத்தை

நெஞ்சு குமுறிட-விழி நீர் அருவியாய்ப் பெருகிட
தெருவோரம் குந்தியிருந்து ஓவென்று குமுறிக் கதறினாள்
உறவென்று வந்த ஒரு இதயமும் ஒரு சுகமும் காணாது
என் உடற்சுகமும் வேண்டாது உயிரிழந்து போனதே-ஐயகோ

விலைமகளின் காதலும் புனிதமானது
காமம் கடந்த காதலும் அமரத்துவமானது.

ராதைக்கும், சீதைக்கும், காதல் சொந்தமல்ல
பரத்தை மாதவிக்கும் காதல் விதிவிலக்கல்ல
காதல் இதயத்தின் மொழி

சீதைகள் தீக்குளித்து மீளலாம்-கண்ணகிகள்
மதுரையை எரித்து கற்பைப் பறைசாற்றலாம்
ஏழை விலைமகளோ ஏங்கியழுது சொன்ன காதலை
இறைவனும் கேட்டு உருகினான்

சீதையை தள்ளி வைத்த சீதா ராமனும்
இவள் பாடலைக் கேட்டு மனம் குமுறுவான்-
ராஜா ராமனும் சீதைக்கு இழைத்த அநீதி கண்டு
வாழ்நாளெல்லாம் வருந்தினான்



கற்பு உடல் சார்ந்த ஒன்றல்ல-மருத்துவம் உறுதிப்படுத்த
இருபால் இதயங்களின் புனித உணர்வு காதல்
ஒழுக்கத்தைச் சொல்வது மதமல்ல
இரக்கத்தையும், ஒழுக்கத்தையும், மன்னிப்பையும்
இயம்புவதே அன்பு மதம்
காதல் ஒழுக்கம் கடந்த அன்பின் வேதம்

மதுரையை எரித்த கண்ணகி- மாதவி மேல்
கோவலன் கொண்ட காமத்தை எரிக்கவில்லை?
நெய் வார்த்த தீயில் நீராடி வந்த சீதை
இராவணனன் காதலைத் தீய்க்கவில்லை

காதற் காமம் புனிதமானது
காமம் கடந்தால் கடவுள் நம் பாவம்

விலைமகளை இயேசு குற்றம் சொல்லவில்லை
சொல் பட்டு கல் எடுத்தவர் கண் மறைந்திட
விலைமகளும் மனுஷியானாள்



ஸ்ரீராமன் கால் பட்டு கல்லான அகலிகை பெண்ணாக
சீதையோ ஸ்ரீராமன் கல்மனம் கண்டு
வேண்டாம் என்றே பின்னாளில் பிரிந்து போனாள்

மறு நாள் இரவு-மரத்தடி நோக்கி ஊர்ந்து வந்த கார்கள் ஏமாந்து திரும்பிட-
கண்ணீரோடு கரை ஒதுங்கிய அலையில் காதலை இழந்த அபலையின் உடல்-
நெய் வார்த்த தீயில் நீராடி வர ஏழையிடம் பணமில்லை,
உண்மையாய் நேசிக்க இனி ஓர் உறவுமில்லை-
காதல் மனம் மட்டும் சொந்தமான நிலை
ஏழையின் காதலை கடவுளை அன்றி யாரும் அறியவில்லை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-05-2023